# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,407 — 1924 ம் ௵ ஆடி௴ 25 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வத்தளை யென்னுமிடத்தில் ஒரு கக்கூசு கட்டுவதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 18,451. குறிச்சி—வத்தளை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கோங்காவத்தை அல்லது மல் வத்தை | உள்ளவைகள், 21 தென்ன மரம், 1 ஈரப்பிலா மரம், 1 ஓட்டு வீடு, 1 ஓட்டுக் கடை | வ்லிமூனே மாசல் வொன்சிக்கா குண சேகராவும், கதிறென் எவ். குண சேகரா | 0 0 30·25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ௵ ஆவணி மாசம் 20 ந் தேதியிலன்று காலமே 11 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்பு கச்சேரி,
1924 ம் ௵ ஆடி௴ 22 ந் ௳.

ஆர். என். தேயின்,
அரசாட்சி ஏசண்டு மேல்மாகாணம்

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தங்கள் இரண்டாவது தொஸ்டற்வீடுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 314. குறிச்சி—தங்கல்ல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | அளுத்கேவத்த நாகநீக்க நி. 12 | சுன்னக்கெட்டுவீடு, கக்கூசும் காணும் உள்ள காணி | அஸ். அல். தாவூது .. | 0 0 25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஷூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஞப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஷூ செப்றம்பற் மாசம் 3 ந் தேதியிலன்று 2 மணிக்கு தங்கல்ல தாணயத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்குஅக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்மாந்தோட்டைக் கச்சேரி,
1924 ம் ஷூ ஜூலைமீ 16 ந் வ.

ஆர். அம். அம். ஆற்ஸ்லி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஷூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பட்டிக்குடியிருப்பில் ஓர் கவுண்மேந்துப் பள்ளிக்கூடம் கட்டுவித்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 6,288. குறிச்சி—பட்டிக்குடியிருப்பு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | முருங்கையடியிற் காணி .. | ஒரு தென்னமரமும், இரண்டு எலுமிச்சை மரங்களும் அழிந்துபோன தமிழ் பள்ளிக்குடமும் உடைய தோட்டம் | கொளும்பிலிருக்கும் சேட்ச் மிஷன் சபைக் காரியதரிசி | 0 2 33 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஷூ-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஞப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம்பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஷூ ஆவணி மாசம் 12 ந் தேதியிலன்று 11 மணிக்கு முல்லைத்தீவில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

முல்லைத்தீவுக் கச்சேரி,
1924 ம் ஷூ ஆடிமீ 17 ந் வ.

எம். கே. நீ. சேன்டிஸ்,
அரசாட்சி உதவி ஏசண்டு.

---

1876 ம் ஷூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்புத் திருக்கோணமலை புகையிரதவீதி உண்டாக்கல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பி. எஸ். பிரதமபடத்து இலக்கம் 21. இரண்டாம் பகுதி. குறிச்சி—நாச்சிக்குடா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 61 | பதமாபதி தோட்டம் அல்லது மடத்தடி தோட்டம் .. | பதிந்தகாடு .. | எஸ். வீ. செல்வத்துரை திருக்கோணமலை 6 ம் வீதி .. | 1 2 17 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சிஞப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஷூ ஆவணி மாசம் 21 ந் தேதியிலன்று 10 மணிக்கு திருக்கோணமலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம்சாதிக்கும் உரித்துகளின தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திருக்கோணமலைக் கச்சேரி,
1924 ம் ஷூ ஆடிமீ 15 ந் வ.

டபிள்யு. எல். மேரபி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஷூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்புத் திருக்கோணமலை புகையிரத வீதி உண்டாக்கல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 5,930. குறிச்சி—கந்தளாயும் பேராற்று வெளியும்.

| லாட்டு. | தரையின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | சின்னச்சேனை .. | நெல்வயல் .. | வல்லிபுரம் இரத்தின சபாபதி திரு 1 ம் நெ. .. | 2 0 23·5 |
| 4 | பெராத்து வெளிவயல் .. | ஷை .. | திரு 1 ம் நெ. தையல் ரெட்டினம் முத்துக்குமாரு | 0 3 24·9 |
| 5 | ஷை .. | ஷை .. | திரு 9 ம் நெ. சி. பொன்னுச்சாமி .. | 0 0 6·3 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 8 | போட்டன்காட்டு வயல் .. | நெற்தரை .. | திரு 5 ம் நெ. மு. உமறுலெவ்வை .. | 0 0 4 6 |
| 9 | ஷை .. | ஷை .. | நாச்சிக்குடா பி. முக்ம்மதுக்காசிம் .. | 0 1 2 7 |
| 10 | ஷை .. | நெல்வயல் .. | பொராற்றுவெளி அச்சுகண்டு தவுது .. | 0 0 21·9 |
| 11 | ஷை .. | நெற்தரை .. | ஷை .. | 0 1 22·5 |
| 12 | ஷை .. | நெல்வயல் .. | நாச்சிக்குடா உ. உதுமான்சா .. | 0 2 34·6 |
| 13 | ஷை .. | ஷை .. | ஷை அதுல்மம்மது மதார் .. | 0 3 26 |
| 14 | ஷை .. | ஷை .. | ஷை மெய்யதீன் செய்யது .. | 0 2 38·2 |
| 15 | ஷை .. | ஷை .. | ஷை அப்துல்பகார் .. | 0 2 24·2 |
| 16 | ஷை .. | ஷை .. | ஷை மெய்யதீன் செய்யது .. | 0 0 11·9 |
| 17 | ஷை .. | நெற்தரை .. | திரு 7 ம் நொம். அப்பாதுரை செட்டி .. | 0 3 35·6 |
| 18 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 1·4 |
| 19 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 0 8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஸ்ரீ ஆவணி மாசம் 21 ந் தேதியிலன்று 10 மணிக்கு திருக்கோணமலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துக்களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திருகோணமலை கச்சேரி,
1924 ம் ஸ்ரீ ஆடிமீ 15 ந் உ.

டபிள்யு. எல். மேர்பி,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பொகெறெம்பையிலுள்ள புதுப் பெண் பாடசாலை என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 3,257. குறிச்சி—பொகெறெம்பை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பான்செலேவத்தை .. | சேனை .. | எம். முடியான்சேக்கும் மறுபேருக்கும் .. | 1 0 7·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஸ்ரீ புரட்டாதி மாசம் 1 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு பொகொறெம்பை பாடசாலையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலை கச்சேரி,
1924 ம் ஸ்ரீ ஆடிமீ 19 ந் உ.

ஜே. ஆர். வோல்றர்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பிற்றியகம ஆண் பாடசாலை என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 3,377. குறிச்சி—அறம்பேகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின்பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | வத்தகேபோகாமுலகேனை, அல்லது குறுப்பு கேபோகாமுலகேனை அல்லது கங்காணிகே போகாமுலகேனை, அல்லது கசுகாமுலகேனை | தோட்டம் .. | கெ. புஞ்சிருளை வெதிருளையும் மறுபேரும் | 1 2 1·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1924 ம் ஆண்டு புரட்டாதி மாசம் 3 ந் தேதியிலன்று காலை 10·30 மணிக்கு கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வு டந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1924 ம் ஸ்ரீ ஆடிமீ 19 ந் உ.

ஜே. ஆர். வேல்ற்றேஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

# 1912 ம் ஆண்டின் 8 ம் இலக்க மதுபானத்தீர்வைச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்.

---

சாராயக் குத்தகை விற்பனவு, 1924–27 மட்டக்களப்புப் பகுதி.

1. 1924 ம் ௵ ஆடி௴ 4 ந் திகதியை உடைய 7,403 ம் இலக்க கசற் பத்திரிகையில் வெளிப்படுத்திய சாராயக் குத்தகை விற்பனவு விபரங்களுக்கு அடக்கமாகவும், 1924 ம் ௵ ஆனி௴ 27 ந் திகதியையுடைய 7,402 ம் இலக்க கசற பத்திரிகையில் வெளிப்படுத்திய சகல எக்சைஸ் உத்தரவுகளுக்கும் பொருத்தமுள்ள பொது விபரங்களுக்கு அடக்கமாகவும், "A" என்னும் அடையாளம் இட்டு இதனடியிற் காட்டியிருக்கின்ற அட்டவணையில் குறிக்கப்பட் தவறணைகளில் 1924 ம் ௵ ஐப்பசி௴ 1 ந் திகதி தொடக்கம், 1927 ம் ௵ புரட்டாசி௴ 30 ந் திகதி வரையுமுள்ள 36 மாதங்களிலும் (3 வருடங்களிலும்) சாராயம் விற்கும் தனி உரித்துக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. "சாராயக் குத்தகைகளுக்கு கேள்விப்பத்திரங்கள்" என்று எழுதப்பட்ட மெழுகிட் டொட்டிய உறைகளில் இருக்கவேண்டிய கேள்விப்பத்திரங்கள் கீழ்மாகாண அரசாட்சி ஏசண்டவர்கட்கு விலாசமிடப்பட்டு, 1924 ம் ௵ ஆவணி௴ 18 ந் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முன் மட்டுக்கழப்பு கச்சேரியில் சேரவேண்டும். அன்னேரத்தில் கேள்விக்காரரும் கச்சேரியிற் சமுகமா யிருக்கவேண்டும்.

2 (a) ஒவ்வொரு சாராயத் தவறணைக்கும் வெவ்வேறு கேள்விப்பத்திரங்கள் அனுப்புதல் வேண்டும். ஒவ்வொன்றிலும் தவறணையின் பேரும் இலக்கமும் உறையில் எழுதியிருத்தல் வேண்டும்.

3. எந்தக் கேள்விப்பத்திரத்தையாயினும் ஏற்காமல்விட அரசாட்சி ஏசண்டுக்கு தத்துவமுண்டு. அத் தத்துவத்துக்கு அடக்கமாக உயர்ந்த கேள்விக்காரன் குத்தகையை பெறுவோனாகி குத்தகை விற்கப்படும் சட்டங்களுக்கு அமைவாக நடக்க வேண்டியவனுவன். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஒரே விதமாயிருந்தால் அல்லது அவைகள் திருத்தியல்லாத கேள்வியாயிருந்தால் குத்தகைகளை பிரசித்த ஏலத்தில் யாதுதல் அல்லது தகுதியெனக்காணும் வேறெந்த விதத்தில் ஆகிலும் அரசாட்சி ஏசண்டுத்துரை விற்கலாம்.

4. எக்சைஸ் இறைவரிப் பணத்தையிட்டு அரசாட்சிக்கு கடனாளிகளாய் உள்ள முந்திய குத்தகைகாரர் அல்லது லைசன்ஸ்காரர்களின் கேள்விகளை அல்லது திருத்தியல்லாத நடத்தை உடையவர்களின் கேள்விகளை அல்லது லைசன்ஸ் சட்டங்களுக்கு மாறாக பாரதூரமான குற்றங்களை செய்தவர்களின் கேள்விகளை அல்லது ஏசண்டுத்துரை அவர்களின் எண்ணத்தில் லைசென்ஸ்காரராய் இருக்கத் தகுதியற்ற குற்றங்களை செய்து கிறிமினல் கோட்டில் குற்றப்பட்டவர்களின் கேள்விகளை ஏற்றுக்கொள்ளாமல்விட ஏசண்டுத்துரைக்கு தத்துவமுண்டு.

4. (a) கேள்விப்பத்திரம் அனுப்புகின்ற அல்லது பிரசித்த ஏலத்தில் விலை வைக்கின்ற ஒவ்வொருவரும் தாம் அப்படிச்செய்ய தகுதி உடையவர் என்று தமது பகுதி பிரதான தலைமைக்காரனிடம் ஒரு நற்சாட்சிப்பத்திரம் விற்பனவு நேரத்தில் கொண்டுவருதல் புத்தியாயிருக்கும்.

5. தீர்வை, கொள்விலை, போத்தல்களின் விலையாகிய இவற்றை நீக்கி அரசாட்சி குதத்தில் இருந்து தவறணைக்கு விற்பனவுக்கு கொண்டுபோகப்படும் ஒவ்வொரு கலன் சாராயத்துக்கும் கேட்ட கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டவருக்கு மேற்காட்டிய 3 ம் இலக்க சட்டத்துக்கு அடக்கமாக குத்தகை விற்கப்படும். ஒரு கலனுக்கு இன்ன வீதம் என்று வெவ்வேறு விலைகள் காட்டப்படவேண்டும்.

(a) மொத்தத்தில் எடுக்கப்படும் சாராயத்துக்கு.

(b) சீல் வோத்தல்களில் எடுக்கப்படும் சாராயத்துக்கு.

6 தீர்வை, கொள்விலை, போத்தல்களின் விலையும், சாராயம் பெற்றுக்கொள்ளும் அரசாட்சி குதங்களின் பெயர்களும் வேறு விபரங்களும் மேற்சொல்லப்பட்ட சாராயக்குத்தகை விற்பனவு சட்டங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

7. தவறணைகள் காலை 8 மணிக்கு திறக்கப்பட்டு இரவு 7 மணிக்கு பூட்டப்படும்.

8. வேறுவிபரங்கள் மட்டுக்களப்புக் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

மட்டுக்களப்புக் கச்சேரி,
1924 ம் ௵ ஆடி௴ 16 ௳.

ஸீ. வீ. பிறெயின்,
கி. மா. ஏசண்டுத்துரை.

A.—சொல்லப்பட்ட அட்டவணை.

குத்தகைக்கு உட்பட்ட பகுதி மட்டக்களப்பு டிஸ்திரிக்.

| இலக்கம். | பகுதி. | என்னகிராமத்தில். |
|---|---|---|
| 1 | ஏறாவூர் கோறளைப்பற்று | வாளைச்சேனை |
| 2 | ஷை | ஏறாவூரும், செங்கலடியும் |
| 3 | மண்முனை வடபகுதி | கோட்டைமுனை |
| 4 | எருவில் போரைதீவு | எருவில் |
| 5 | கரைவாகுப்பகுதி | கல்முனை |
| 6 | ஷை | காரைதீவு |

1 ம் இலக்கத் தவறணை.—இத்தவறணை மட்டுக்களப்பு திருக்கோணமலை றேட்டில் 18½ கட்டைக்கும் 19½ கட்டைக்கும் இடையில் இருக்கவேண்டும். அத்துடன் றேட்டில் இருந்து 70 யார் தூரத்தில் றேட்டைப் பார்த்தாப்போல் இருக்கவேண்டும்.

3 ம் இலக்கத் தவறணை.—இத்தத்தவறணை ஏறக்குறைய இப்போ இருக்கும் இடத்திலும் பெரும்தெருக்கு முகம் காட்டியதாயும் பொலிஸ்ரேஷனுக்கு சமுகமாயும் இருக்கவேண்டும்.

A. C. RICHARDS, ACTING GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.